Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் குரல் மக்கள்
திசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmil.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

RS Polyclinic
Dr M. Rajkumar
Dr K. Nanthi Shivaraswari
Dr Santhosh Rajkumar
Dr Shanthi K
Dr Sajina R
Dr Praveena E

தொகுதி - 6 | நாளிதழ் | 6 பக்கங்கள் சென்னை, 25 நவம்பர் 2026 ரூ.2/- இதழ் - 136

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் அவர்கள் சிங்கப்பெண் சிறப்பு அதிரப்படை வாகனங்களை ஆய்வு செய்து, பெண் காவல் அதிகாரிகள் மற்றும் போலீசாரிடம் குறைகளை கேட்டறிந்தார்.



சென்னை – 25 நவம்பர், 2026 தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் பொருட்டு சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை என்ற சிறப்பு பிரிவினை, 09.06.2026 அன்று சென்னை, எழும்பூர், ராஜரத்தினம் மைதானத்தில் துவக்கி வைத்தார்கள்.இதன் தொடர்ச்சியாக, சென்னை பெருநகர காவல் ஆணையாளர் முனைவர் A.அமல்ராஜ் அவர்கள் மேற்பார்வையில், சென்னை பெருநகரில் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை சென்னை பெருநகரின் 4 மண்டலங்களிலும் 4 உதவி ஆணையாளர்கள் ஒருங்கிணைப்பு அதிகாரிகளாக (Nodal Officers) நியமிக்கப்பட்டு இயங்கி வருகிறது. சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களுடன் தங்களது மண்டலத்தில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டும், பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பினை உறுதி செய்வதுடன் அவர்களது புகார்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் முனைவர் A.அமல்ராஜ் அவர்கள், இன்று (24.11.2026) காலை எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை போலீசார் பயன்படுத்தி வரும் வாகனங்களை ஆய்வு செய்தார், மேலும் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையினர், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் எனவும், பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்புக்காகவும், அவர்களுக்கு அவசர உதவி தேவைப்படும் பட்சத்தில் விரைந்து சென்று உதவி செய்யவும், அவர்களது புகார்கள் மீது விரைந்து உரிய விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவும், பெண்கள் அச்சமின்றி பொது வெளிகளில் செல்லும் வகையில் தீவிர ரோந்து மற்றும் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

மேலும் சிங்கப்பெண் சிறப்பு அதிரப்படை பிரிவில் பணிபுரியும் பெண் காவல் அதிகாரிகள் மற்றும் போலீசாரிடம் குறைகளை கேட்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்க காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இந்நிகழ்ச்சியில் தலைமையிட இணை ஆணையாளர் E.S.உமா பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத்தடுப்பு பிரிவு கூடுதல் துணை ஆணையாளர் G.ஹரிகுமார், சென்னை பெருநகரின் 4 மண்டலங்களின் ஒருங்கிணைப்பு அதிகாரிகளான உதவி ஆணையாளர்கள்.ரமேஷ்பாபு,.ராஜசேகர்,.மணிமேகலை,.ஆல்ட்ரி ஆகியோர் கலந்துகொண்டனர்.